1972 டிசம்பர் 12]

திரு. எம். தேவராசன் : இந்த ஷெரீப் பதவியானது வெறும் அலங்காரமாக அமைந்திருக்கிறது என்று கூறுகிறீர்கள். இது எந்த அளவிற்கு உண்மை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது ஒருவகைப்பட்ட கருத்து.

திரு. ஆ. பரந்தாமன் : இந்த ஷெரீப் பதவியை எடுத்துவிடுகிற யோசனை ஏதாவது அரசிடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

Ponds scheme for Ammanpalayam

* 131 Q.—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to form ponds in Ammanpalayam near Velliangadu, Uthukuli Firka, Erode taluk, Coimbatore district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கன்னிமார் கோவில் ஏரி சீரமைக்கும் திட்டம் ரூ. 92,000 செலவில் தற்சமயம் முடிக்கப் பட்டுள்ளது. அம்மன்பாளையத்தில் ஒரு குட்டை அமைத்தால் கன்னிமார்கோவில் ஏரியின் பாசனம் பாதிக்கப்படும். எனவே இத் திட்டம் செயல்படுத்தச் சாத்தியக்கூறு இல்லை.

Bridge across Vettaru

* 132 Q.—Thiru A. RAJAMANICKAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to reconstruct the very old bridge across Vettaru near Nagore?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

Arumanai-Kuzhithurai road

* 133 Q.—Thiru N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state the steps taken by the Government to enforce the proposals for locating an alternative road at Kuzhithurai to the Arumanai Kuzhithurai Road during floods in Kanyakumari district?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : குழித்துறையில், அருமனை குழித்துறை சாலைக்கு ஒரு மாற்று சாலை அமைக்கும் செயற் குறிப்பு தற்பொழுது இல்லை.

திரு. என். டென்னிஸ் : மழை காலங்களில் போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருப்பதால் அதன் அவசியம் மிகவும் அதிகமாக ஆகிறது. ஆதலால் அதை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்த மாற்றுச் சாலை அமைப்பதற்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப் பிடப்பட்டிருக்கிறது. அடுத்த ஐந்தாண்டுத் திட்டத்தில் இதுபற்றி நடவடிக்கைகள் எடுப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : குழித்துறைத் தாலுகா ஹெட்க்வார்ட்டர்ஸ், நீதி மன்றங்கள், பல பொது காரியாலயங்கள் உள்ள இடமாகும். மழை காலங்களில் இந்த ரோடில் வெள்ளம் நிரம்பிவிடுகிற காரணத்தினுல் பொது மக்கள் இந்த அலுவலகங்களுக்குச் செல்வ தற்கு வழி இல்லாமலிருக்கிறது. எனவே இதன் அவசியத்தை உணர்ந்து ஐந்தாண்டுத் திட்டத்திற்காக ஒத்திவைக்காமல் நமது நிதி ஆண்டுத் திட்டத்தில் உட்படுத்திச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேள்வி கேட்கப் பட்டிருப்பது பை பாஸ் பற்றி. அதற்கு ஐந்து லட்சம் ரூபாய் செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது, அடுத்த ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறேன். ஊருக்குச் செல்லும் சாலையைப் பொறுத்தவரையில் துணை மேம் பாட்டுப்பணிகளை அரசு செய்யும்.

ஆயக்காரன்புலம் கூட்டுறவு விவசாய வங்கி.

* 134 வினு.—திரு. மா. மீனுட்சிசுந்தரம் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், ஆயக்காரன்புலம் கூட்டுறவு விவசாய வங்கி கலைக்கப்பட்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?